


12. 08. 2025

தலைப்பு செய்திகள்

- வளர்ச்சி அடைந்த பாதையில் நம்நாடு பயணிப்பதற்கான ஒருமைப்பாட்டு சின்னமாக மூவர்ண தேசிய கொடி திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு.கஜேந்திர சிங் ஷெகாவத் பெருமிதம் தெரிவித்தார்.
- பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் இதுவரை 4 கோடியே 12 லட்சம் வீடுகள் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய இணை அமைச்சர் திரு. சந்திரசேகர் பெம்மசானி கூறினார்.
- தமிழ்நாட்டில் முதியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுதேடி ரேசன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தை, சென்னை தண்டையார் பேட்டையில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.
- துப்புரவு பணியாளர்களின் போராட்டத்தை சுமூகமாக முடிக்க தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு கூறியுள்ளார்.
- சீன செங்குடுவில் Wushu 52 கிலோ எடை பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் நம்ரதா – சீனாவின் Mengyue Chen-ஐ இன்றுமாலை எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

**********

கஜேந்திரசிங் ஷெகாவத்

நாட்டின் 79ஆவது சுதந்திரதினத்தை ஒட்டி இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி இருசக்கர வாகன பேரணியை மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் மூவர்ண கொடி நம் தேசத்தை ஒருங்கிணைப்பதாகவும் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த தியாகிகளை நினைவுபடுத்துவதாகவும் எடுத்துரைத்தார்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை நோக்கி நாடு முன்னேறி செல்வதற்கான ஒற்றுமை சின்னமாக மூவர்ண தேசிய கொடி திகழ்கிறது என்று திரு.ஷெகாவத் பெருமிதம் தெரிவித்தார்.

இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி ஏற்றுவோம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சேலத்தில் அஞ்சல் துறை ஊழியர்கள் தேசிய கொடியுடன் விழிப்புணர்வு பேரணியை இன்று மேற்கொண்டனர்.

**********

நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 3 மணிவரையிலும்,

மாநிலங்களவை பிற்பகல் 2 மணிவரையிலும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

இரு அவைகளும் இன்றுகாலை கூடியவுடன் பீஹார் பிரச்சனையை எழுப்பி எதிர்கட்சிகள் முழக்கத்தில் ஈடுபட்டதை அடுத்து நிலவிய அமளி காரணமாக மக்களவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியதும் அமளி தொடரவே பிற்பகல் 3 மணி வரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

அமளியின் ஊடே மக்களவையில் ஊரக மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் திரு.சந்திரசேகர் பெம்மசானி பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் குறித்த கேள்விக்கு இன்று பதில் அளித்தார்.

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் இதுவரை 4 கோடியே 12 லட்சம் வீடுகள் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதில் 2 கோடியே 90 லட்சம் வீடுகள் ஏற்கனவே கட்டமைக்கப்பட்டதாக எடுத்துரைத்தார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சியின் போது 66 ஆயிரம் கோடி ரூபாய் பெருமான வீடுகள் மட்டுமே கட்டப்பட்டதாகவும் ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு 2 லட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள வீடுகளை வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மாநிலங்களவையிலும் பீஹார் பிரச்சரனையில் அமளி நிலவியதால் அவைத்துணை தலைவர் திரு.ஹரிவன்ஷ் பிற்பகல் 2 மணிவரை அவையை ஒத்திவைத்தார்.

**********

ஓம்.பிர்லா

உயர்நீதிமன்ற நீதிபதி இல்லத்தில் ரொக்கப்பணம் கண்டெடுக்கப்பட்ட விவகாரம் குறித்து விசாரிப்பதற்காக 3 உறுப்பினர்கள் கொண்ட குழுவை நியமித்து மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மக்களவையில் இன்று இதனை தெரிவித்த அவர் இந்த குழு தனது அறிக்கையை விரைவில் சமர்பிக்கும் என்று கூறியுள்ளார்.

இதுதொடர்பான 146 உறுப்பினர்களின் கையெழுத்திட்ட மனு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இருப்பினும் இக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்னரே இதுகுறித்து முடிவெடுக்கப்படும் என்றார்.

நீதிபதியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரி ஆளும் மற்றும் எதிர்கட்சி தரப்பில் 146 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு மனு அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**********

யானைகள் தினம் பூபேந்தர் யாதவ்

60 சதவிகித ஆசிய யானைகளின் வசிப்பிடமாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய சுற்றுசூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச யானைகள் தினத்தை ஒட்டி அமைச்சர் விடுத்துள்ள சமூகவலைதள பதிவில் செயற்கை நுண்ணறிவு கண்காணிப்பு, அது சார்ந்த பயிற்சிகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உள்ளிட்ட தொழில்நுட்ப வசதிகளின் மூலம் யானை - மனித மோதல்கள் பெருமளவு குறைந்ததாக எடுத்துரைத்தார்.

யானைகளை பாதுகாக்க இந்நாளில் உறுதி ஏற்கவும் அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

திரு.புபேந்தர் யாதவ் இன்று பிற்பகல் கோவையில் யானைகள் தொடர்பான சிறப்பு பயிற்சி பட்டரையை தொடங்கிவைக்கிறார்.

யானைகளின் வாழ்விட மேலாண்மை, பராமரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வல்லுநர்களின் கருத்துக்கள் இதில் இடம்பெறுகின்றன.

**********

எல்.முருகன்

சர்வதேச இளைஞர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் வழங்கப்படும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வாய்ப்புகளை பயன்படுத்தி இளைஞர்கள் முன்னேற வாழ்த்தியுள்ளார்.

சுய சார்பு பாரதத்தை உருவாக்கும் உந்து சக்தியாக திகழும் இளைஞர்களின் ஆற்றலையும், தொலைநோக்கு பார்வையையும் கொண்டாட இத்தினம் வழிகோலுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

**********

முதலமைச்சர் ரேசன் பொருட்கள்

தமிழ்நாட்டில் முதியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுதேடி ரேசன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தை, சென்னை தண்டையார் பேட்டையில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

இதனை தொடர்ந்து மாநிலம் முழுவதும் அமைச்சர்களும் மாவட்ட ஆட்சித்தலைவர்களும் இந்ததிட்டத்தை இன்று தொடங்கிவைத்தனர்.

ஒவ்வொரு மாதமும் 2ஆவது சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைமுறைபடுத்தப்படும் இந்த திட்டத்தின் மூலம் 21 லட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள்.

திருச்சியில் மாநில அமைச்சர் திரு.கே.என்.நேரு, இந்த திட்டத்தை துவக்கிவைத்து பேசினார்.

வாய்ஸ்

தூத்துக்குடியில் திருமதி.கீதாஜீவன்,

சிவகங்கையில் திரு.பெரியகருப்பன்,

ஈரோட்டில் திரு.முத்துசாமி உள்ளிட்டோர் இந்த திட்டத்தை தொடங்கிவைத்தனர்.

**********

முதலமைச்சர் தொடர்ச்சி

தமிழ்நாட்டில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், 177 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டங்களை முதலமைச்சர் இன்று சென்னை தலைமைச்செயலகத்தில் இருந்து தொடங்கிவைத்தார்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், 111 பேருக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கிய அவர், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அர்ச்சகர்களின் வாரிசுதாரர்களுக்கு 600 பேருக்கு 60 லட்ச ரூபாய் பெருமான கல்வி உதவித்தொகையையும் அளித்தார்.

**********

கே.என்.நேரு

துப்புரவு பணியாளர்களின் போராட்டத்தை சுமூகமாக முடிக்க அவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இத்தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற காலஅவகாசம் தேவை என்று குறிப்பிட்டார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடன் நான்குமுறை தாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும், இப்பணியாளர்களை நிரந்தரம் செய்வது குறித்து முதலமைச்சர் முடிவெடுப்பார் என்றும் குறிப்பிட்டார்.

தூய்மை பணி பாதிக்க கூடாது என்பதற்காக ஏற்கனவே பணியில் உள்ளவர்களை தான் பணியில் பயன்படுத்தி வருவதாகவும், புதிதாக யாரையும் பணிக்கு எடுக்கவில்லை என்றும் கூறினார்.

தூய்மை பணியாளர்களின் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதாகவும், அதில் தீர்வு ஏற்பட்டவுடன் நாளைக்குள் இப்போராட்டம் முடிவுக்கு வரும் என்றும் குறிப்பிட்டார்.

தெரு நாய்களை கட்டுப்படுத்துவதற்கான உச்சநீதிமன்றத்தின் உத்தரவு அருமையானது என்று பாராட்டியுள்ள அவர், உத்தரவு நகல் வந்தவுடன் தமிழகம் முழுவதும் அந்த உத்தரவு செயல்படுத்தப்படும் என்றார்.

**********

துரைமுருகன்

பாலாறு மாசுவை தடுக்க உச்சநீதிமன்ற அறிவுறுத்தலுக்கு ஏற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் திருவளத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் காட்பாடி அருகே மதிமண்டலம் பகுதியில் சிப்காட் அமைக்க மக்கள் எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை என்றார்.

கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர் திமுக ஆட்சியில் பல ஏரிகள் தூர்வாரப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

முன்னதாக தமிழக அரசின் தாயுமானவர் திட்டத்தை அமைச்சர் தொடங்கிவைத்தார்.

**********

துணை கலந்தாய்வு

அண்ணா பல்கலைகழகத்தின் கீழ் செயல்படும் 423 பொறியியல் கல்லூரிகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான துணை கலந்தாய்விற்கு விண்ணப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

துணை கலந்தாய்வு வரும் 21ஆம் தேதி தொடங்குகிறது.

**********

இருவரி

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சியில் மாநில அரசின் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இரண்டு கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான வார சந்தை கட்டுமான பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவை ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் இன்று தொடங்கிவைத்தார்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் உள்ள தனியார் கல்லூரியில் போதை பொருள் இல்லா தமிழகத்தை உருவாக்குவதற்கான மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**********

சேலம்

சேலம் மாவட்டம் சித்திரபாளையம் கிராமத்தை சேர்ந்த அரசு பள்ளி மாணாக்கரும், ஆசிரியர்களும் தங்கள் கிராமத்தை பசுமையாக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

- - வாய்ஸ் - -

**********

காஞ்சிபுரம்

கிருஷ்ண ஜெயந்தியையொட்டி, சின்ன காஞ்சிபுரத்தில் கிருஷ்ணர் பொம்மைகள் தயாரிக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெறுகிறது.

பல்வேறு வகையான கிருஷ்ணர் பொம்மைகள் தயாரிக்கப்பட்டு பல பகுதிகளுக்கு அனுப்பப்படுவதாக அப்பகுதியை சேர்ந்த பொம்மை தயாரிப்பாளர் தெரிவிக்கிறார்.

- - வாய்ஸ் - -

**********

வானிலை

மத்திய மேற்கு மற்றும் வடமேற்கு வங்க கடல் பகுதிகளில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை உருவாக கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுவடையக்கூடும் என்று கூறியுள்ளது.

இதனிடையே வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை விழுப்புரம் கள்ளக்குறிச்சி கடலூர் நீலகிரி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் தெரிவித்துள்ளது.

**********

உலக விளையாட்டு

சீன செங்குடுவில் நடைபெறும் உலக விளையாட்டு போட்டிகளில் Wushu 52 கிலோ எடை பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் நம்ரதா – சீனாவின் Mengyue Chen-ஐ இன்றுமாலை எதிர்கொள்கிறார்.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது